# புது வாழ்வு திட்டம், சேலம் மாவட்டம்.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் மூலம் சேலம் மாவட்டம் புது வாழ்வு திட்டம் செயல்படும் அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆலடிப்பட்டி கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு 2 Bolero Pickup மற்றும் 1 Maxximo hoods Carrier ஆகிய வாகனங்கள் வாங்க ரூ.15,42,500/–(ரூபாய் பதினைந்து லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) பெறப்பட்டது. இத்திட்டத்தினை செயல்பாட்டிற்கு வருவதற்கு முன் மலைவாழ் மக்கள் போக்குவரத்து வசதி இன்றியும், தாங்கள் விளைவித்த பொருட்களை விற்பனை செய்வதற்காக சந்தைகளுக்கு தலைச் சுமையாகவே எடுத்து சென்றதால் மிகவும் சிரமமாகவும் கால விரையமும் உண்டானது. தற்பொழுது இந்த திட்ட செயல்பாட்டிற்கு பின் மலைவாழ் மக்கள் போக்குவரத்து வசதியால் வேலைவாய்ப்புகள் அதிகரித்தும் உரிய நேரத்தில் விளை பொருட்களை எடுத்து செல்வதால் நல்ல சந்தை விலையும் கிடைக்கப்பெற்றதுடன் தங்களின் வாழ்வாதாரம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்த பயண ஊர்தியின் மூலமாக இந்த மலைவாழ் கிராமத்து மக்கள் இரவு நேரங்களிலும் கூட விரைந்து மருத்துவமனை செல்ல குடும்ப நிகழ்ச்சிகள், மற்றும் குழந்தைகள் பள்ளிக்கு சென்றுவர என பல வகையிலும் பயன்படுகிறது.

இந்த திட்டத்தின் நோக்கத்தினை முழுமையாக எய்திவிட்டோம் என்று சொன்னால் மிகையாகாது. இதுபோன்று மறைமுகமாகவும், நேரடியாகவும் ஆலடிப்பட்டி கிராமத்திற்கு வாழ்வு மேம்பாடு அடைந்துள்ளது. இத்திட்டம் ஒரு நல்ல திட்டம் என்பதில் ஐயம் இல்லை.

SLEC-IV

Project No - 142






REGISTERED
SKS AUTOMOBILES


STOP
SOUND HORN
Y-2949